பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : பங்குனி 8 (21—3—68) வியாழன் ★ வெளியூர் : பங்குனி 9 (22—3—68) வெள்ளி [இதழ் 233

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத குடும்பம். சுகாதாரச் செழிப்புப் பெற்றுச் சுகமாக வாழவும், அனைவரும் உணவு, உடை, உறையுள் வசதிகள் பெறவும், குடும்பத்துக்கு ஒர், இரு குழந்தைகள் இருப்பதே நல்லது.

சட்டம்--- அமைதி கெட்டது எப்போது?

கழகத் தோழர்கள் கொலையுண்ட போதெல்லாம்கூட நாங்கள் இப்படிக் குற்றஞ்சாட்டவில்லையே!

காந்தியாரே சுட்டுக்கொல்லப்பட்டதும் காங்கிரசு ஆட்சியில்தானே?-- எதிர்க் கட்சியினரின் கூப்பாட்டுக்கு அறிஞர் அண்ணா தரும் பதில்

சென்னை, மார்ச் 20—

"வெள்ளைக்காரன் காலத்திலே, 'இந்தப் போலீசுக்காரர்கள் எல்லாம் வெள்ளைக்கார தாசர்கள்—வெள்ளைக்காரன் சொற்படி ஆடுபவர்கள்' என்று சொல்லப்பட்டார்கள்; அப்போது, 'போலீசுக்காரர்கள்' என்றுகூடச் சொல்லமாட்டார்கள்; 'செந்தலைப் பூச்சிகள்' என்றுதான் சொல்லுவார்கள்; 'நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அவர்களை எங்கள் காலின் கீழே போட்டு நசுக்குவோம்' என்றெல்லாம் காங்கிரசுக்காரர்கள் பேசினார்கள்; இந்தப் பேச்சைப் போலீசுக்காரர்கள், 60 வருடம் கேட்டார்கள்; பிறகு காங்கிரசு ஆட்சி 20 ஆண்டு நடந்தது; அப்போது, 'காங்கிரசின் கையாட்கள்' என்று சொல்லப்பட்டதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்: இப்போது, கழக ஆட்சியின் மேற்பார்வையில் போலீசுத் துறை இருப்பதாலே, 'கழகத்துக்கு வேண்டியவர்கள்' என்கிறார்கள்; இதைக் கேட்டு, உள்ளுக்குள்ளே போலீசுக்காரர்கள் சிரிக்கிறார்கள்! எந்தப் பக்கத்தில் யார் இருந்தாலும் போலீசார் அரசின் பக்கம் தான் இருப்பார்கள்!

"இப்போது வந்து, 'சட்டம்இருக்கிறதா—சமாதானம் இருக்கிறதா ஒழுக்கம் கெட்டு விட்டது' என்று மாலை நேரத்தில் தடித்த குரலில் பேசுகிறார்களே அவர்களுக்காகச் சொல்லுகிறேன்— உடையார்பாளையம் வேலாயுதம், நெல்லிக்குப்பம் மஜீத், கோவை ஆரோக்கியசாமி, தூத்துக்குடி கே. வி. கே. சாமி, தூத்துக்குடி தாளமுத்து, மயிலாடி மாரியப்பன், ஆலந்தூர் சின்னான், வட சென்னை பாண்டியன், ஆலங்குடி சிதம்பரம்—என்று, எங்கள் கழகத்துக்காரர்கள் இவ்வளவு பேர் காங்கிரசு ஆட்சிக்காலத்திலே தான் படுகொலை செய்யப்பட்டார்கள்! கே. வி. கே. சாமி தவிர, மற்ற எந்த வழக்கிலும் இதுவரை துப்புத் துலக்கப்படவில்லை! நினைவுக்கு வந்த பெயர்களை மட்டும் சொன்னேன்—இன்னும் எவ்வளவோ? அப்போதெல்லாம் நாங்கள், 'சட்டம் கெட்டு விட்டது—சமாதானம் குலைந்துவிட்டது' என்றெல்லாம் பேசவே இல்லை! காங்கிரசுக்காரர்கள் வேண்டுமானால், 'அவர் செத்ததற்கு அது காரணம்; இவர் செத்ததற்கு இது காரணம்' என்று பேசிக்கொண்டிருந்தார்களே தவிர, வழக்கு -- தண்டனை என்று ஒன்றுகூட இல்லை!

"படுகொலை நடப்பது - சில இடங்களில் கொள்ளைகள்கூட நிகழ்வது—கற்பழிப்பது—அடிதடி நடப்பது என்பதெல்லாம், 'இந்தப் பாவிகள்' ஆட்சிக்கு வந்த பிறகுதான்—என்று காங்கிரசுக்காரர்கள் சொல்லுவார்களா? 1948-ல் உங்கள் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோதுதானே மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார்! நடந்தது உங்கள் ஆட்சிதானே! ஆனால், 'போலீசுத் துறையே இலாயக்கற்றது' என்று நீக்கி விட்டீர்களா? 'எவ்வளவோ பாதுகாப்புகள் இருந்தும், எப்படியோ சுட்டுவிட்டான் பாவி' என்றுதானே பெருந்தன்மையுடன் நாடு சொல்லிற்று! அப்போதுகூட, 'சட்டம் -- அமைதி கெட்டுவிட்டது' என்று யாரும் சொல்லவில்லையே!"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில், காவல்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளிக்கையில் விளக்கினார்கள். 'சட்டம் – அமைதி குலைந்து விட்டது' எனக் கூப்பாடு போடும் காங்கிரசாருக்கு மேலும் பதிலளிக்கும் வகையில் அண்ணா அவர்கள் பேசியதாவது :—

ஒவ்வொரு குடிமகனின் சனநாயகக் கடமை இது!

"சட்டம் அமைதியை போலீசு மட்டும் தனியே எப்படி நிலை நாட்ட முடியும்?

எதிர்க் கட்சிக் கொறடா திரு. விநாயகம் அவர்கள் பேசுகிற போது, மதுவிலக்குக் குற்றம் புரிகிறவர்களைத் தாம் பார்ப்பதாகச் சொன்னார்; 'கண்டு பிடித்தால் கண்டுபிடியுங்கள்; இல்லாவிட்டால், எக்கேடு கெட்டாவது போங்கள்' என்று அவர் சொன்னார்.

குற்றங்கள் செய்யப்படுவது தெரிந்தால் அதனை அரசின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது ஒவ்வொரு குடிமகனுடையவும் சனநாயகக் கடமையாகும். 20 ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்து அனுபவம் மிக்கவர்கள் அவர்கள்; இதுவரை இல்லாவிட்டாலும், இனியாவது இப்படிப்பட்ட குற்றங்களைக் காவல்துறையின் கவனத்துக்குக் கொண்டுவந்தால் குற்றங்களைக் களைய வழி ஏற்படும்.

அப்படி அவர்கள் சொல்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

இப்போது தி. மு. கழகம் ஆளுங் கட்சியாக இருக்கிறது. சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. டி. எஸ். ஆதிமூலம் அவர்கள் சொன்னதுபோல், நாங்கள், ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திலேயே, 'சட்டம் கெட்டுவிட்டது; அமைதி குலைந்துவிட்டது' என்று சொன்ன காங்கிரசுக்காரர்கள், ஓராண்டு கழித்துச் சொல்வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

நான் தூய இதயத்தோடு இந்த மன்றத்திலே சொல்லுகிறேன்; நான், காவல்துறையினருக்கு ஏற்கனவே சொல்லியிருப்பது இதுதான்;—

"குற்றஞ்செய்பவர்களைக் காண்பீர்களானால், குற்றவாளியின் சட்டை உங்கள் கண்ணுக்குத் தெரியக் கூடாது; அவர்களின் குற்றமே கண்ணுக்குத் தெரிய வேண்டும்."

ஆகவே, குற்றம் செய்பவர்கள் தி. மு. க.-வைச் சேர்ந்தவர்கள் அல்லது தி. மு. க. ஆதரவாளர்கள் என்றால், அதற்காகப் போலீசார் நடவடிக்கை எடுக்காமல் விடமாட்டார்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆனால், அப்படிக் குற்றங்களுக்காகப் பிடிக்கப்படுவதிலே, 'பிடிபட்டவர்கள் அனைவரும் காங்கிரசுக்காரர்கள்; விடுபட்டவர்கள் அனைவரும் கழகத்துக்காரர்கள்' என்று தப்பாகப் பிரச்சாரம் செய்வதில் ஈடுபடாதீர்கள்!

ஏற்பட்ட நெருக்கடிகளை எண்ணிப் பாருங்கள்!

ஆட்சிக்கு வந்த நாள் முதலாய் ஏற்பட்ட மன உளைச்சல்—நெருக்கடிகளைக் கொஞ்சம் அனுதாபத்தோடு காணுங்கள்!

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே பீதியூட்டும் அளவுக்குச் சென்னை நகரில் குடிசைகள் தீப்பற்றி எரிந்தன; அதற்குப் பிறகு வார்னிஷ் சாவுகள்; அதையொட்டிக் கலவரங்கள்—கலகங்கள்; பிறகு மொழிக் கிளர்ச்சி பெருத்த அளவில் வெடித்துக் கிளம்பியது-அதைத் தொடர்ந்து சில அசம்பாவிதங்கள் கோவையிலும், பொள்ளாச்சியிலும் நடைபெற்றுக் கடைசியில் எழும்பூர் நிலையத்தில் தோழர் அன்பழகன் தாக்கப்படுகிறவரை நடந்தது.

'அன்பழகனைத் தாக்குகினார்கள்' என்றுகூடக் காங்கிரசு நண்பர்கள் சொல்லவில்லை; அதை ஏதோ, (Some disturbance) என்றுதான் குறிப்பிட்டார்கள்.

விவரம் தெரியாதவர்கள் அல்லர் போலீசார்!

இவ்வளவுக்கும் இடையில் நாங்கள் பணியாற்றினோம். எங்களோடு எல்லாவகையிலும் போலீசார் ஒத்துழைத்துச் சட்டம் — அமைதி காத்தார்கள் என்று அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போலீசாருக்கு நான் 'Instructions' கொடுத்திருக்கிறேன் என்று திரு விநாயகம் அவர்கள் சொன்னார்; நான் அப்படி ஒன்றும் கொடுக்கவில்லை. நான் 'Instructions' சொன்னால், அப்படியே செய்யப் போலீசார் ஒன்றும் விவரம் தெரியாதவர்கள் அல்லர்; அதை 'எழுதிக் கொடுங்கள்' என்று அவர்கள் கேட்பார்கள்.

நீங்கள் செய்த கொடுமைகளை நாங்கள் சொன்னோமா?

கழக ஆட்சி வந்தபிறகு காங்கிரசார்மீது வேண்டுமென்றே வழக்குகள் போடப்படுவதாகச் சொன்னார்கள். மாறாக, காங்கிரசு ஆட்சிக் காலத்திலேதான் இந்த மாமன்றத்திலே விவசாயத் துறை அமைச்சராக வீற்றிருக்கும் திரு. கோவிந்தசாமி, கடலூரில் ஒரு பூக்கடை

(4-ம் பக்கம் பார்க்க)

தீ விபத்துப் புலன் விசாரணையில்

தலையிட்டது காங்கிரசே!

சென்னை. மார்ச் 20—

சட்டமன்றக் காங்கிரசுக் கட்சிக் கொறடா திரு. கே. விநாயகம் பேசிக்கொண்டிருந்தபோது, 'சென்னை நகரில் நடந்த தீ விபத்துக்களின் விளைவால் 36 பேரைக் கைது செய்து—2 பேரை மட்டும் வைத்துக்கொண்டு—34 பேரை விடுதலை செய்துவிட்டீர்கள்; அதற்கு என்ன காரணம்?' என்று கேட்டார்.

அண்ணா :—"நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது என்பதில் காவல் துறை அவ்வளவு கவனமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாமே :"

கே. விநாயகம் :—"இது, முதலமைச்சரின் பதில் சொல்லும் சாமர்த்தியம்--அவ்வளவுதான்; ஆனால், தீ விபத்துப் பற்றிய புலன் விசாரணையில் அரசு தலையிட்டது உண்மை. 'அரசு' என்பதை, நான் முதலமைச்சரின் உருவத்தில்தான் காண்கிறேன்."

அண்ணா :—இவ்வளவு தூரம் விநாயகம் பேசுவதாலே இன்னொரு முக்கிய உண்மையையும் சொல்லிவிடுகிறேன். நான் அந்தப் புலன் விசாரணையில் தலையிடவே இல்லை; ஆனால், தமிழக அரசியலில் உள்ள மிகப் பெரிய காங்கிரசுக்காரர் ஒருவர்தான் ஒரு போலீசு அதிகாரியிடம் வந்து, விசாரணையில் தலையிடும் வகையில் நடந்துகொண்டார்."

பாலசுப்பிரமணியம் (இடது கம்.) :—"பிரச்சினை முக்கியமானது என்பதாலே, அந்தக் காங்கிரசுத் தலைவரின் பெயரை இந்த மன்றத்தில் முதலமைச்சர் வெளியிட வேண்டுகிறேன்."

அண்ணா :—"இந்தப் பிரச்சினையில், பெயர் முக்கியமன்று; அவர் செய்த செயல் சராசரி மனிதனின் செய்கைக்கும் கீழான செயல்; அவரோ, தமிழக அரசியலில் காங்கிரசுக் கட்சியில் மிகப் பெரிய இடம் பெற்றிருப்பவர்; எனவே அந்தச் செயலோடு இணைந்த இந்தப் பெயரை இங்கே சொல்ல வேண்டாம் என்றே கருதுகிறேன்."

---முதலமைச்சர் அண்ணா
(சட்டமன்றத்தில்)

வரலாற்றில் முதன்முறை!

சென்னை, மார்ச் 21—

காவல்துறை மானியத்தின் மீது நேற்று தமிழகச் சட்டமன்றத்தில் காலை 9 மணிக்குத் தொடங்கிய விவாதம், இடைவேளை இன்றித் தொடர்ந்து ஏழரை மணி நேரம் நடைபெற்று மாலை 4-30 மணியளவில் முடிவுற்றது.

தமிழகச் சட்டமன்ற வரலாற்றிலேயே இப்படி நடப்பது இதுதான் முதல்முறையாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது!

இடதுசாரிகளைக் காட்டி மிரட்ட வேண்டாம்!

சென்னை, மார்ச் 19—

"யார் யாரோ செய்துவிட்டுப் போன கேடுகளுக்கெல்லாம் எங்கள் பேரில்தான் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். இது எங்கள் 'ஜாதக'மாக இருக்கிறது!

"எங்கோ இந்தி ஆதிக்கத்தைப் புகுத்தினார்கள்—அதற்கு நாங்கள் பதில் சொல்லவேண்டியவர்களானோம்!

"உணவு நெருக்கடியைச் சரியாகக் கவனிக்காமல் சென்றுவிட்டார்கள்—அதற்கும் நாங்கள் பதில் சொல்லவேண்டியவர்களானோம்!

"இப்பொழுது காங்கிரசுக்காரர்கள், தாங்கள் ஆட்சியில் இல்லை என்று குறைபட்டுக் கொண்டாலும்கூட, 'பெரும் பாரத்தைச் சரியான நேரத்தில் தள்ளிவிட்டோம்' என்று மகிழ்ச்சியடைவார்கள். இதை அப்போதே இராஜாஜி சொன்னார்—'இருபது ஆண்டுக்கால கேடுகளையெல்லாம் நாம்தான் தாங்கவேண்டியிருக்கும்; இது கடினமான காரியம்' என்று அவர் சொன்னார். அன்று அவர் சொன்னது இன்று என் நினைவுக்கு வருகிறது!

"'இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள், உங்களுடன் சேர்ந்தே இருந்து உங்களைக் கவிழ்த்து அவர்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வார்கள்' என்று காங்கிரசுக்காரர்கள் கூறுகிறார்கள். இந்த இரண்டு பேரில் யார் ஆதிக்கம் பெற்றாலும், எதிலே நட்டம் என்பது எங்களுக்குத் தெரியும்!

"காங்கிரசு ஆட்சி செய்த இருபது ஆண்டுகளில் அது முதலாளிகளின் பக்கமே இருந்திருக்கிறது என்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. ஆகையால், 'கொள்ளைக்காரன் வருகிறான்; இருப்பதைக் கொடுத்துவிடு' என்று கேட்டு வாங்குவதுபோல், 'இடதுசாரிகள்—ஜாக்கிரதை' என்று சொல்லிக் காங்கிரசை வளர்த்துக்கொள்ள விரும்ப வேண்டாம்! நானும் 'ஜாக்கிரதை'யாக இருக்கக்கூடியவன் என்பதை நீங்கள் அறிவீர்கள்!"

—முதலமைச்சர் அண்ணா

(சட்டமன்றத்தில்)

'நம் நாடு' கருத்து— 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் கார்ட்டூன் வடிவில்!

'தபால் கார்டுகளைப் பெரும்பாலும் படித்தவர்களும், பணக்காரர்களும மட்டுமே பயன்படுத்துகின்றனர்; எனவே, விலை உயர்வு ஏழை*களைப் பாதிக்காது என்று பட்ஜெட் பதிலுரையின்போது மொரார்ஜி தேசாய் குறிப்பிட்டதையொட்டி,

"இனி, தபால் அலுவலகங்களில், 'படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே கார்டு விற்பனை செய்யப்படும்' என்ற அறிவிப்புப் பலகையினைத் தொங்கவிட அவர் முயற்சி செய்யட்டும்"

என்று, கடந்த வெள்ளியன்று வெளியான 'நம் நாடு' இதழின் கட்டுரையின் கருத்து, 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் ஞாயிறு இதழில், கார்ட்டூன் வடிவில் வெளிவந்திருக்கிறது!

பிரபல விமர்சக ஓவியரான ஆர். கே. இலட்சுமண் எழுதியிருக்கும் அந்தப் படத்தில், மொரார்ஜி தேசாய் ஒரு தபால் நிலையத்தில் அமர்ந்திருப்பது போலவும், அப்போது ஒரு குடிமகன் பை நிறையப் பணத்தைத் தூக்கிக்கொண்டு வந்து (விலையேற்றத்தைக் குறிப்பதற்காகத்தான் பை நிறையப் பணம்) கார்டு ஒன்று கேட்பதுபோலவும், அதற்கு மொரார்ஜி தேசாய், 'கார்டு, படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே' என்ற அறிவிப்புடன் தொடங்கும் பலகையினைக் காட்டுவது போலவும் விமர்சிக்கப்பட்டிருக்கிறது!

இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி நிலை

தீவிரவாதிகள் வெளியேற்றப்படுவர்?

ஆந்திர மாநில அமைப்பும் கருத்து வேறுபாடு காட்டுகிறது

நான்கு நாட்கள் கல்கத்தாவில் நடைபெற்றிருக்கும் இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உயர்மட்டக் குழு நடவடிக்கைகளின் முடிவினை வைத்துப் பார்க்கும்போது, அந்த அமைப்பு, கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கும் தன்மை புலப்படுகிறது.

கொள்கையளவில் இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியில் 'தீவிரவாதி'கள் என அழைக்கப்படுவோரும்—ஆந்திர மாநில அமைப்பும் மிகவும் வேறுபட்டு நிற்பதாகத் தெரிகிறது!

பெயருக்கேற்ப, தீவிரவாதிகள், 'கட்சியின் கொள்கைகளிலும், நடவடிக்கைகளிலும் இன்னும் சற்றுத் 'தீவிரம்' வேண்டும்' என வாதாடுகிறார்கள்.

ஆனால் கட்சி அமைப்பு இதற்கு இணங்குவதற்குத் தயக்கம் காட்டுவதாகக் கல்கத்தா செய்தி ஒன்று கூறுகிறது.

கட்சித் தலைமையின் இந்த முடிவினால், 'தீவிரவாதி'களும், அவர்களைவிடத் தீவிரம் காட்டும் ஆந்திர—மேற்கு வங்க மாநில அமைப்புக்களும் வெளியேறினாலும் வியப்புக்குரியதல்ல!

சீனக் கம்யூனிஸ்டு கட்சியும், இங்கே உள்ள நக்சல்பாரி அமைப்பும், கடந்த சில காலமாகவே இடதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியின்மீது குறை கண்டு வருத்தம் காட்டிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்த திங்களில், 'பர்துவான்' என்னுமிடத்தில் நடைபெறவிருக்கும் உயர் மட்டக் கட்சிக் கூட்டத்தில் கருத்துவேறுபாடு பற்றிய சச்சரவுகள் இன்னும் வெளிப்படையாகத் தெரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"தீவிரம் காட்டுவதில் ஆந்திரா போன்ற மாநில அமைப்புகள் உறுதியாக இருந்தால், கட்சித் தலைமை, அந்த அமைப்பினைக் கலைக்கவும் தயங்காது" என்று பொதுச் செயலாளர் சுந்தரய்பா செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

பர்மா-இலங்கை அகதிகட்கு மறு வாழ்வு

தமிழக அரசின் செயல் முறைத் திட்டங்கள்

ஆய்விலுள்ள காலப் பகுதியில், 1,434 பர்மா அகதிகளும், 149 இலங்கை அகதிகளும் தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் வேலை வாய்ப்பு உதவி நாடிப் பதிவு செய்திருந்தனர்.

மொத்தத்தில் 174 பர்மா அகதிகளும், 10 இலங்கை அகதிகளும் ஆய்விலுள்ள காலப் பகுதியில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இம்மாநிலத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பதிவேடுகளில் உள்ளவாறு 1,103 பர்மா அகதிகளும், 123 இலங்கை அகதிகளும் வேலை வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.

அகதிகளிடமிருந்து வந்த 59 விண்ணப்பங்கள் தொழிலதிபர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டன; வந்த 502 மனுக்கள் மீது இந்த அலுவலகம் நடவடிக்கை எடுத்தது.

ஆய்விலுள்ள காலப் பகுதியில் 127 தொழிலதிபர்களிடம் வேலை வாய்ப்புத் தொடர்பு அதிகாரி தொடர்பு கொண்டார். பர்மா இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பது சம்பந்தமாகவே அவர் அவ்வாறு தொடர்பு கொண்டார்.

ஆய்விலுள்ள காலப் பகுதியில் இந்த அலுவலகத்திற்கு வந்து பதிவு செய்த சுமார் 500 அகதிகளுக்குத் தனிப்பட்ட வகையில் வழி காட்டப்பட்டது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளும் வசதிகளும் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது குறித்துத் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பர்மா, இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியாகத் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றில் ஒவ்வொரு தொழிலிலும் சேர்த்துக்கொள்ளப்படக்கூடியவர்களின் எண்ணிக்கையில் 5 சதவீதம் பர்மா-இலங்கை அகதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்களுடன் தங்கியிருந்து பயிற்சிப் படிப்புப் பெறுபவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 25 உதவிப் பணமும், பெற்றோர்களை விட்டுவந்து தனியே பயிற்சி பெறுபவர்களுக்கு மாதத்திற்கு ரூ. 55 உதவிப் பணமும் வழங்கப்படுகிறது.

தொழிற்பயிற்சி நிலையங்களில்—நிறுவனங்களில் பயிற்சி பெறும் அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் மாதத்திற்கு ரூ. 43 அளவில் படிப்பு உதவிப் பணம் அளிக்கப்படுகிறது.

—சட்டம், கூட்டுறவு அமைச்சர்

செ. மாதவன்

(சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட அறிக்கையில்)

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் வன்முறைகள்

காங்கிரசார் குற்றச்சாட்டுக்கு அண்ணா பதில்

சென்னை, மார்ச் 18—

குமரி மாவட்டம் பூதப்பாண்டியில் அரசுப் பேருந்தை மாணவர்கள் நிறுத்தியதுபற்றிய கேள்விக்கு இன்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பதிலளித்தார்.

"இம்மாதிரிச் செயல்களை அரசினரே தூண்டிவிடுவதாகப் பேசப்படுவது உண்மையா?"

என்று காங்கிரசு உறுப்பினர் கே. விநாயகம் கேட்டார்.

அதற்கு அண்ணா அவர்கள் பதிலளித்ததாவது:—

"இந்தத் தவறான கருத்தை முதலில் உறுப்பினர் மனத்திலிருந்து நீக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்த மாநிலத்தில் மட்டுமல்ல—வேறு பல மாநிலங்களிலும் நடக்கின்றன.

"மேலும், இப்படி, இப்போது மட்டுமல்ல — பல்லாண்டுகளாகவே நடக்கின்றன; எனவே, இந்த அரசு தூண்டிவிடுவதாக உறுப்பினர் கொண்டுள்ள கருத்தை நீக்கிக்கொள்ளவேண்டும்.

"இதன் பின்தொடர்ச்சியாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதே இந்த அரசின் கொள்கையாகும்."

இராமச்சந்திர துரை (காங்.):—"இந்தச் சம்பவங்களில் சில தீய சக்திகள் நுழைந்து வன்முறைகளில் ஈடுபட்டது அரசுக்குத் தெரியுமா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?"

அண்ணா:—"இப்படிப்பட்ட சம்பவங்களில் சிலர் பின்னணியில் இருந்துகொண்டு தீயசக்திகளைத் தூண்டுகிறார்கள் என்று கூறுவது வழக்கமாகிவிட்டது. ஓர் அரசியல் கட்சி இன்னோர் அரசியல் கட்சியை, 'தீயசக்தி' என்று இதன்மூலம் கூற ஏதுவாகிறது. இப்படிப்பட்ட சம்பவங்களில் மேற்கொண்டு நீதிமன்றத்தில் வழக்குப் போடுவதன் மூலம், நிலைமையை மேலும் மோசமாக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசின் கொள்கையாகும்."

மறுமலர்ச்சி நாளில் சீரணியினர் பணி!

சென்னை 36 வது வட்டத்தில் சாலை அமைத்தனர்

மறுமலர்ச்சி நாள் விழாவையொட்டி, பெரம்பூர் தொகுதி சீரணியினர், 6—3—68 மாலை 6 மணியளவில் 36-வது வட்டம் அங்காளம்மாள் கோயில் ரோடில் உள்ள கோவிந்தபுரத்தில், அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் துவக்கிவைக்க — ரோடு போடும் பணியில் ஈடுபட்டனர்.

சீரணித் தனி அதிகாரி பரமசாமி, தலைவர் நீலநாராயணன், செயலாளர் சு. பாலன் தொகுதித் தலைவர் ஜி டில்லிராஜ் ஆகியோர் உடனிருந்து தொண்டர்களை உற்சாகப்படுத்தி இரவு 8-30 மணி வரையிலும் பணியாற்றச் செய்தனர்.

பணி தொடர்ந்து மறுநாள் (7—3—68) காலை 9 மணிக்குத் தொடங்கி கடும் வெயிலையும் பொருட்படுத்தாது தொண்டர்கள் உற்சாகத்தோடு பணியாற்றி, மதியம் 1 மணியளவில் வேலையினை முடித்தனர். சுமார் ஒரு பர்லாங் தூரத்திற்கு அங்கு வாழும் ஏழை மக்களுக்கு பெரம்பூர்த் தொகுதிச் சீரணியினரால் பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

சீரணியினர் பணியினை அனைவரும் பாராட்டினர்.

கரம்பக்குடி ஒன்றியத்தில் சீரணிப் பணி!

கரம்பக்குடி தெற்குப் புதுத் தெருவில் திரு. கா. மைதீன் பிச்சை இராவுத்தர் வீடு, 9-3-68 அன்று தீப்பிடித்து எரிந்தபோது, கரம்பக்குடி சீரணித் தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, தீ பரவாமல் அணைத்தனர்.

கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமணஞ்சேரி செல்லும் சாலை மிகவும் சீர்கெட்டு போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருந்தது; அந்தச்

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசு உறுப்பினருக்குப் பிறந்த 'கருணை'!

சென்னை, மார்ச் 20—

"வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ. 40 வீதம்தான் உதவித்தொகை வழங்கப்படுகிறது; தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு ரூ. 80 வழங்கப்படுகிறது; தீயினால் பாதிக்கப்பட்டாலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும் வீடுகட்டும் செலவு ஒன்றாகத்தான் இருக்கும்; எனவே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கும் ரூ 80 வீதம் அளிக்கப்படுமா?" என்று காங்கிரசு உறுப்பினர் ஒருவர் சட்டமன்றத்தில் கேட்டார்.

அதற்கு வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் பதிலளித்ததாவது:—

"வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவித் தொகையைக் கூட்டித் தரவேண்டும் என்று கேட்கும் உறுப்பினரின் பெரியமனத்தைப் பாராட்டுகிறேன்; ஆனால் முந்திய ஆட்சியில் இருசாராருக்கும் ரூ 40 வீதம்தான் கொடுக்கப்பட்டது; அறிஞர் அண்ணா ஆட்சி ஏற்பட்ட பின்னர்தான், தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித்தொகை உயர்த்தப்பட்டது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் உறுப்பினருக்கு இந்த வகையில் கருணை பிறந்திருப்பது பாராட்டத்தக்கது."

கோடைக்கானலைக் கவர்ச்சிப்படுத்தத் திட்டம்

அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, மார்ச் 20—

"கோடைக்கானலை சிறந்த சுற்றுப்பயண நகராகவும், மலைவாச இடமாகவும் மேம்படுத்த 237 ஏக்கர் நிலத்தை ரூ. 58,700 செலவில் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது; இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதால் அந்தப் பணி இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றத் தீர்ப்பின் நகல் கிடைத்ததும் மேல் நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராயப்படும்"

என்று, அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

துணைக் கேள்விகளுக்கு அவர் பதிலளித்ததாவது:—

"கோடைக்கானலில் உள்ள ஏரியைச் செம்மைப்படுத்தி—அழகான பூங்காக்கள் அமைத்து கவர்ச்சிகரமாகச் செய்யவும், ஏரியில் படகுப் போட்டிகள் நடத்துவது உட்பட பல்வேறு திட்டங்கள் உள்ளன. வழக்கு மன்றத்தில். இதற்காகும் செலவில் பாதியை மத்திய அரசும், மறு பாதியை மாநில அரசும் ஏற்கின்றன. நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் குறிப்பிட்ட அந்த இடம் கிடைக்கவில்லை என்றால், வேறு இடத்தைத் தேர்ந்தெடுப்பது பற்றி ஆராயலாம். கோடைக்கானலில் இரயில் விட இயலாது."

ஊழியர் குறைகள்

அரசு பரிசீலிப்பதாக அமைச்சர் தகவல்

சென்னை, மார்ச் 19—

"சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் தற்காலிகமாகப் பணியாற்றுவோர் 5 ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்க விதி இருந்தது. அதன் பிறகு இந்தக் காலவரம்பு 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. இப்போது மூன்றாண்டுகள் தொடர்ந்து வேலை செய்தவர்களெல்லாம் நிரந்தரமாக்கப்பட்டுவிட்டனர். சிலர், தங்களின் பணியில் முழு அளவு தேர்ச்சி பெறாத காரணத்தினாலேயே 4, 5 ஆண்டுகளாயும் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள்; அவர்களும், முழு அளவு தேர்ச்சி பெற்றதும் நிரந்தர ஊழியராக்கப்படுவர்" என்று சட்டமன்றத்தில், செய்தித்துறை அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து கூறினார்.

"அச்சக ஊழியர்களின் குறைபாடுகளும், கோரிக்கைகளும் அடங்கிய விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது" என்றும் அமைச்சர் கூறினார்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் அம்பலம்—காமராசர் புளுகோ...?

"'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்' என்பார்கள்; தி. மு. க. ஆட்சிக்கு வந்து ஒரு வருட காலமாகப் புளுகிக்கொண்டிருக்கிறது; புளுகுவதில் மன்னர்கள் அவர்கள்; காங்கிரசு, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் எதுவுமே செய்யவில்லை என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்."

— காமராசர்

(19—3—68-ல் கன்னியாகுமரியில் பேசியிருப்பது)

"கடந்த 20 ஆண்டுகளாகக் காங்கிரசு எதையுமே செய்யவில்லை என்றுஅடாவடித்தனமாகப்பேசி எனக்குப் பழக்கமில்லை."

—முதலமைச்சர் அண்ணா

(6—3—68-ல் நிதிநிலை விவாதத்துக்குப் பதிலளித்து சட்டப் பேரவையில் பேசியபோது குறிப்பிட்டது)

பள்ளி இறுதிப் படிப்புப்போதும்-

ஊதியமோ ஆயிரத்தில் பாதி!

"அரிசன நலத் துறையில் டிப்டி-டைரக்டராகப் பணிபுரிபவருக்கு பள்ளி இறுதி வகுப்புத் தகுதி (எஸ்.எஸ்.எல்.சி.) இருந்தால் போதும்; ஊதியமாக அவர், ரூ. 550—800 பெறுவதற்குத் தகுதி பெற்றவராகிறார்"

என்றவகையில் சட்டம் திருத்தப் பட்டிருப்பதாகக் கேரளச் சட்ட மன்றத்தில் அரிசன நலத் துறை அமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் விளக்கியுள்ளார்.

இதற்கு முன்னதாக அப்பதவிக்கு, பட்டப் படிப்புப் பெற்றவர் மட்டுமே தகுதியாளராகக் கருதப் பட்டுவந்தார்.

குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம்

மாநில வீட்டு வசதி ஆயம் மேற்கொண்டுள்ள பணிகள்

சட்டமன்றத்தில் அமைச்சர் செ. மாதவன் விளக்கம்

சென்னை, மார்ச் 20—

"சென்னை மாநகரில் 491 குடிசைப் பகுதிகள் உள்ளன; அவற்றில் 57 பகுதிகளை மாநில வீட்டு வசதி ஆயத்தின் மூலம் சீரமைக்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது; நிதி நிலை சீரானதும் செயல்படுத்தப்படும்; நடப்பு ஆண்டில் 12 குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது; இதற்காக ரூ. 63,70,000 செலவு மதிப்பிடப்பட்டுள்ளது"

என்று, சட்டமன்றத்தில் அமைச்சர் திரு. மாதவன் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் கூறியதாவது:—

"இரண்டு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன; ஒன்று — செம்மைப்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கிக் குடிசை கட்டிக் கொடுப்பது; மற்றொன்று—'டெனமெண்ட்' கட்டிக் கொடுப்பது; நடப்பு ஆண்டில், திட்டமிட்டபடி 12 குடிசைப் பகுதிகள்தான் மேம்படுத்தப்பட வேண்டுமென்றும் 19 குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

"குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் பணியைத்தான் மாநில வீட்டு வசதி ஆயம் மேற்கொண்டுள்ளது. குடிசைப் பகுதிகளுக்கான வசதிகளை மாநகராட்சிதான் செய்து தரவேண்டும்."



நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது—அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்பநிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை.

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது-உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகர டின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்'முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக் குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில் சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB
மெட்டல் பாக்ஸ்
பாதுகாப்பான பாக்கிங்

ஆந்திராவில் இந்தச் சம்பவம்:

அரிசனச் சிறுவன்

உயிருடன் எரிக்கப்பட்டான்!

'ஈவான் ஸ்மித்' பற்றிப் பதறுவோர் இதற்கென்ன பதில் தரமுடியும்?

'வெட்கம்,'—'காட்டுமிராண்டித்தனம்' என்று உள்துறை அமைச்சர் சவான் அவர்களால் விவரிக்கப்பட்டிருக்கும் வேதனை தரத்தக்க கொடிய குற்றம் ஒன்று ஆந்திராவின் சிற்றூர் ஒன்றில் நடைபெற்றிருக்கிறது.

மக்களவையில் உள்துறை அமைச்சர் சவான் இதுபற்றி அறிவித்ததாவது:—

கிருஷ்ணா மாவட்டத்தின் சிற்றூர் ஒன்றில், கடந்த 24-ந் தேதி திருட்டுக் குற்றம் ஒன்றுக்காக அரிசனச் சிறுவன் ஒருவன் பிடிபட்டான்; குற்றத்தை அவன் ஒப்புக்கொண்ட பிறகு—களவாடிய பொருள்களையும் தேடிப் பிடித்தபிறகு—அக்கிரமத்துக்காரர்கள் சிலர் அந்தச் சிறுவனை, பந்தல் தூண் ஒன்றில் கட்டி நையப் புடைத்திருக்கின்றனர்!

அத்துடன் விடாது அவனது ஆடைகளுக்குத் தீயிட்டு, நெருப்பினுல் அவன் வெந்து அலறுவதையும் பார்த்துக் களித்திருக்கின்றனர்!

போலீசு நிலையத்திற்குச் சென்று அச்சிறுவன் புகார் செய்தபின்னர், வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

தீப்புண்களால் பாதிக்கப்பட்ட அவன், பின்னர், விஜயவாடா மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

குணமாக்கப்பட முடியாத நிலையில் அச்சிறுவன் இரண்டு நாட்கள் கழித்து—பிப்ரவரி 26-ந் தேதியன்று இறந்தான்!

அவனைத் தீயிட்டுக் கொளுத்தியவர்கள், கண்மறைவிலிருக்கின்றனர்!

அமெரிக்க நீக்ரோ பிரச்சினை பற்றியும், தென் ஆப்பிரிக்க அரசின் நிறவெறி பற்றியும், அண்மையில் அங்கே கறுப்பர்களைத் தூக்கிலிட்டுக் கொன்ற கொடுமைபற்றியும் இந்திய அரசு அவ்வப்போது வெகுண்டெழுந்து கண்டித்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

"கீழ் சாதி என்ற ஒரே காரணத்துக்காகவே, இத்தகைய சட்டத்துக்குப் புறம்பான கொடுமைகள் இழைக்கப்பட்டிருக்கின்றன" என்ற தன்மையைக் காட்டுவதற்குத்தான் நாடாளுமன்றத்தில் சில உறுப்பினர்கள் எடுத்துக் கூறியபின்னர், சவான் மேற்கண்ட செய்தியை வெளியிட்டார்.

கொடியும் கம்பும்!

சென்னை, மார்ச் 20

"கறுப்புக் கொடி காட்டுவது என்பது, எதிர்ப்புத் தெரிவிக்கிற ஒரு சனநாயக முறை; அதை நான் மறுக்கவில்லை!

"எங்களுக்குக் கறுப்புக் கொடியைக் கண்டாலும் அருவருப்பு பிறப்பதில்லை; ஏனென்றல், எங்கள் கொடியில் பாதி கறுப்பு!

"ஆனல், அந்தக் கொடியைத் தாங்கும் கம்பு இருக்கிறதே—அதற்கு ஒரு அளவு இருக்க வேண்டாமா?

"முழ நீளக் கப்பு போதாது கறுப்புக் கொடி காட்ட? ஆனல், காங்கிரசுக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டுவது, கொடி—அருவருப்புக்கும், கம்பு—அடிதடிக்கும்! வேண்டுமானல், கடலூரில் தோழர் கருணாநிதியைத் தாக்க வந்தவர்களின் கம்பின் அளவைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்."

--முதலமைச்சர் அண்ணு
(சட்டமன்றத்தில்)

கூடலரசன்

சுற்றுப்பயணம்

மார்ச் 24: ஒட்டன்சத்திரம்; 25: அய்யம்பாளையம்; 26: சுப்புலாபுரம்; 27: மூலக்கடை; 28: மதுரை; 29: சிலைமான்; 30: நாட்டரசன் கோட்டை; 31: ஆரப்பாளையம்.

ஏப்ரல் 1: நிலக்கோட்டை; 2: வடுகபட்டி; 3: வாடிப்பட்டி; 7:- வல்லம்; 14: பொன்னகரம்; 21: மதுரை; 28: சென்னை.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

22--3--68

ஆலந்தூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு மாதவபுரம் காலனியில்; தலைவர்: இரத்தினம்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., துணை மேயர் பவள வண்ணன், ஆலந்தூர் எஸ். பாலன், எஸ். பாலகிருட்டினன், எஸ். வேணுகோபால், இர. கோதண்டராமன், ஆர். எஸ். பாரதி, கோ. மோகன், செல்வராஜ், கே. லோகநாதன், எம். முனுசாமி, நடேசன்.

மதுரை

4-வது வட்டார அறிவு வளர்ச்சிப் படிப்பக 16-வது ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு ஆட்டு மந்தைப் பொட்டல் சந்தில் (மீன் மார்க்கெட் அருகில்); தலைவர்: எம். ஏ. தங்கள் முகம்மது; ஆண்டறிக்கை: எஸ். பி. எஸ். அமீது; கொடியேற்றுபவர்: கே. எம். சையது இஸ்மாயில்; பேசுவோர்: கா. இராசா முகம்மது பி.ஏ., கு. திருப்பதி பி.ஏ. பி.எல்., ஏ. எஸ். கலைநேசன், என். முகம்மது ரபி பி.ஏ. (ஆனர்சு) பி எல்., கே. தாவூது, ஆர். கே. சாந்துலால், எம். ஏ. ரகீம், மை சுல்தான், எம். மதுரை வீரன் எம்.சி., கே. எஸ். சந்தானம் எம்.சி., வி. சு. மணி.

எதிர்க் கட்சியினர் கூப்பாட்டுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கல்லாவைத் திறந்து கொள்ளையடித்ததாக ஒரு வழக்குப் போடப்பட்டு,ஓராண்டு நடைபெற்றது.

'சட்டம்—ஒழுங்கு குலைந்துவிட்டது' என்றுர்கள். ஒருரிலே காங்கிரசுக்காரரைக் கையிலே விலங்கிட்டு அழைத்துச் சென்றதை இங்கே சொன்னுர்கள். இதே விவசாய அமைச்சரைக் கைவிலங்கு பூட்டித் தெருக்களில் அழைத்துச் சென்றிருக்கிறுர்கள் காங்கிரசார்!

காலையிலே இந்த அவையிலே பேசினுரே ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவரைக் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றிருக்கிறுர்கள்!

இங்கே அவைத்தலைவராக வீற்றிருக்கிறவருக்கும் அந்த 'ஆபரணம்' பூட்டப்பட்டிருக்கிறது!

மேலவையில் உறுப்பினராக உள்ள மதுரை எஸ். முத்து அவர்களைக் கைவிலங்கிட்டு மதுரை மாநகர் வீதிகளில் அழைத்துச் சென்றிருக்கிறுர்கள்!

இவற்றை யெல்லாம் நாங்கள் வெளியேகூட ரோம்பச் சொன்னதில்லை! 'சட்டம்—அமைதி கெட்டுவிட்டது' என்று நீங்கள் எதையெதையோ சொல்லுவதாலே, நான் இதையெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம்போய், 'சட்டம்—அமைதி கெட்டுவிட்டது' என்று நாங்கள் பேசவில்லை!

அதே நாளில் பம்பாயில், வீட்டு வேலைக்காரி உட்பட மூன்று பேர் பகிரங்கமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள்!

நவம்பர் 24-ல் இராஜ்கோட்டில், துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் இறந்தார்!

1968 சனவரி 13-ல் புதுடில்லியில்—தலைநகரில் ஒரு பெண்ணின் தலையில்லாத முண்டம் காணப்பட்டதாகச் செய்தி வந்தது!

பிப்ரவரி 4-ல் பெங்களூரில் துப்பாக்கிச் சூடு—2 பேர் செத்தார்கள்!

பிப்ரவரி 27-ல் கல்கத்தாவில் துப்பாக்கிச் சூடு—3 பேர் பலியாளுர்கள்!

அதே நாளில், விசாகப்பட்டினத்தில் 2 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்!

மார்ச் 12-ல் திருவனந்தபுரத்தில் இரண்டு மீனவர் குழுக்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக 5 பேர் கொல்லப்பட்டார்கள்!

இந்த இடங்களிலே எல்லாம், 'சட்டம் கெட்டு விட்டது—அமைதி கெட்டு விட்டது' என்ரு அர்த்தம்?

எவ்வளவுதான் பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொண்டாலும், சில கொடியவர்கள் இந்தக் குற்றங்களைச் செய்துகொண்டுதான் இருப்பார்கள்!

அதற்குக்கூட, போலீசுத்துறை மட்டும் செயல்பட்டு சட்டம் அமைதியைக் காத்திட முடியாது!"

சட்டமும் அமைதியும் இங்கெல்லாம் எப்படி?

1967 அக்டோபர் 7-ல் அசாம் மாநிலத்தில் கௌகத்தியிலே கலகம் நடந்து சுடப்பட்டார்கள்!

அக்டோபர் 7-ல் ஸ்ரீநகரில் துப்பாக்கிச்சூடு!

அக்டோபர் 15-ல் பம்[illegible]யில் 8 ரவுண்டுகள் துப்[illegible]க்கிச்சூடு!

அக்டோபர் 1[illegible]ாவில் துர்கா பூ[illegible] க[illegible], சலகத்தில் து[illegible] சூடு—7 பேர் பலி! [illegible]ணநய[illegible]

அக்டே[illegible]றலாம்."

எனஞ[illegible]

கிரையக[illegible]

மடைந்தனர்; 144 போடப்பட்டது!

கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகள்

சென்னை நக்கீரர் கழகம்—திருவள்ளுவர் தமிழ் கல்லூரியின் சார்பில் நடைபெறும் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுத் தொடரின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி, 22—3—68 மாலை 6-15 மணிக்கு மாநிலக் கல்லூரி தமிழ்த் துறை அறையில் நடைபெறும்; 'தொல்காப்பியம்' என்ற தலைப்பில், புலவர் க. பழநி பாலசுந்தரனுர் சொற்பொழிவாற்றுவார்.

23—3—68 மாலை 6-15 மணிக்கு 'யாப்பு--தண்டி' என்ற தலைப்பில் புலவர் கா. சி. தனக்கோடி எம்.ஏ. சொற்பொழிவாற்றுவார்.

உங்கள் குடும்பத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்

1. 'வாசெக்டமி' எனப்படும் ஆண்களுக்கான அறுவை முறையே குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மெத்தவும் உகந்தது; ஏனெனில், அறுவை முறைதான் மிகவும் எளிதானது—பாதுகாப்பானதும் கூட.

2. 'வாசெக்டமி' அறுவை முறைதான் நிலையானது; குறைந்தது மூன்று குழந்தைகளையுடைய தந்தைமார் மட்டுமே 'வாசெக்டமி' மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள அணுக வேண்டும்.

3. 'வாசெக்டமி' அறுவை மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள விரும்பும் குடும்பத்தின் கணவனும் மனைவியும், தாங்கள் இம்முறைக்கு முழு மனத்தோடு ஒப்புக்கொள்வதோடு, இதன் மூலம் தங்களுக்கு இனிமேல் மேற்கொண்டு குழந்தைப் பேறு கிட்டிடும் வாய்ப்பு அறவே அற்றுப்போகிறது என்பதையும் திட்டவட்டமாக உணர்ந்து கொண்டிருப்பதாகவும், எழுத்து மூலம் ஒப்புதல் தெரிவித்து, அதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள உடன்பாட்டுப் பத்திரத்தில் தாமாகவே விரும்பி இருவரும் கையெழுத்திட வேண்டும். கணவன்—மனைவி ஆகிய இருவரது எழுத்து மூலமான ஒப்புதலளிப்புக்குப் பின்னர்தான், அக்குடும்பத்தின் தந்தைக்கு 'வாசெக்டமி' எனும் அறுவை செய்யப்படும்.

4. இக்குடும்பக் கட்டுப்பாட்டுக்கான 'வாசெக்டமி' அறுவை முறை மிகவும் எளிதானது—மிகச் சில நிமிடங்களுக்குள்ளாகவே செய்து முடிக்கப்பட்டு விடுகிறது.

5. அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தையர், மருத்துவமனையிலே தங்கி மேலும் சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமே கிடையாது. அறுவைச் சிகிச்சை முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பி, வீட்டிலேயே ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

6. அறுவைச் சிகிச்சையின்போது போடப்பட்ட தையல்கள் அனைத்தும் ஐந்தாம் நாளன்றே பிரிக்கப்பட்டு விடுகிறது. அதுமுதல், 'வாசெக்டமி' செய்துகொண்ட தந்தையர், வேலைக்குத் திரும்பி வழக்கம்போல் தமது அன்றுட அலுவல்களில் ஈடுபடலாம்.

7. சிகிச்சைக்குள்ளான தந்தையர் அனைவரும் குறைந்தது இரண்டு மாத காலத்திற்கு சைக்கிள் ஓட்டக்கூடாது.

8. 'வாசெக்டமி' அறுவை செய்து எட்டு வார காலம் கடந்த பிறகுதான் ஆண் விந்துவிலுள்ள கருவுண்டாக்கும் வீரியச் சத்து அடியோடு அற்றுப்போகும். இந்த எட்டு வார கால இடைவெளியில் உடலுறவு கொண்டால் சம்பந்தப்பட்ட தாய்மார் கருத்தரிக்கக் கூடும். எனவே, இந்த இடைக் காலத்தில் உடலுறவு கொள்ள விரும்பினுல், 'காண்டோம்' ரப்பர் கருவியையோ அல்லது வேறு உறுதியான கருத்தடைச் சாதனங்களையோ மறவாமல் கையாள வேண்டியது அவசியமாகும்.

9. இந்த அறுவைச் சிகிச்சையால் தந்தையரின் உடல்நலம் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதே இல்லை. உடலுக்கு ஊறு தரும் கெடுதலான விளைவுகள் எவையும் ஏற்படுவதில்லை.

10. 'வாசெக்டமி'க்கு உட்பட்ட ஆடவரின் ஆண்மை ஒரு சிறிதும் குன்றுது. ஆண்—பெண் உறவுகொள்ளும் இன்பத்திற்குக் கிஞ்சிற்றும் குந்தகம் விளைத்திடாது. அறுவைக்குப் பின்னரும் மணவாழ்வின் இன்பத்தை என்றும்போல் தொடர்ந்து துய்த்திடப்புற்றிட முடிகிறது.

11. 'வாசெக்டமி' செய்துகொண்ட காரணத்தால் சிரண சக்தியோ செயலாற்றலோ குறைவதில்லை.

12. இந்த 'வாசெக்டமி' அறுவை முறை 1959-ஆம்ஆண்டிலிருந்து தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் நாலரை இலட்சத்திற்கு மேற்பட்டோர் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். அறுவைக்குப் பிறகு எந்தவிதமான கெடுதலும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

13. எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும், பிரைமரி ஹெல்த் சென்டர்களிலும், மற்றும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற அறுவைச் சிகிச்சை நிலையங்களிலும், 'வாசெக்டமி' சிகிச்சையானது கட்டணம் ஏதுமின்றி இலவசமாகச் செய்யப்பட்டு வருகிறது.

14. இத்துறையில் நன்கு பயிற்சியும் அனுபவமும் மிகுந்துள்ள மருத்துவர்களைக் கொண்டே 'வாசெக்டமி' அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

15. மீண்டும் கருத்தரிக்கச் செய்யும் ஆற்றலை ஊட்டுவதற்கான சாத்தியக்கூறுகளும் இப்போது அனுபவபூர்வமாகச் செயல்படத் தொடங்கியுள்ளன. எனவே 'வாசெக்டமி' செய்துகொண்ட தம்பதிகளுக்கு மீண்டும் குழந்தைப் பேறு கிட்டவே கிட்டாது எனும் அச்சமும் தேவையற்றது. மீண்டும் விரும்பினுல், குழந்தைப் பேறு கிட்ட வாய்ப்பு உண்டு.

16. அரசினரின் அங்கீகாரம் பெற்ற அறுவைச் சிகிச்சை நிலையங்களில் 'வாசெக்டமி' செய்துகொள்ளும் தந்தையர் அனைவருக்கும் இழப்பீட்டுப் படியாக ரூ. 30 அளிக்கப்பட்டு வருகிறது. அறுவைக்குப் பின் தொடர்ந்து ஐந்து நாள் வேலை செய்யாமல் ஓய்வெடுக்கும் காலத்தின் ஊதிய இழப்பைச் சரிக்கட்டுவதற்காகவே இந்த இழப்பீட்டுப் படி அளிக்கப்பட்டு வருகிறது. ஐம்பது வயதுக்கும் குறைவான வயதையும் குறைந்த பட்சம் மூன்று குழந்தைகளையும் உடைய தந்தையர் மட்டுமே இந்த இழப்பீட்டுப் படியைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். மூன்று குழந்தைகளுக்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வாசெக்டமி' அறுவை முறைதான் மிகச் சிறந்த முறையாகும்.

'வாசெக்டமி' அறுவை முறை தொடர்பாக மேல் விவரங்களுக்கும், தேவையான உதவிகளுக்கும் உங்களுக்கு அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை அல்லது பிரைமரி ஹெல்த் சென்டரில் உள்ள டாக்டரை அணுகுங்கள்.

இதற்கும் மேலாகத் தேவைப்படும் விவரங்கள் கிடைக்குமிடம்:—

1. மாநில குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பொதுச் சுகாதார இயக்குநர், 81, மவுண்ட் ரோடு, சென்னை-6.

2. துணை இயக்குநர், குடும்பக் கட்டுப்பாடு, 81, மவுண்ட் ரோடு, சென்னை-6.

கரம்பக்குடி ஒன்றியத்தில்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாலையைச் செப்பனிடும் வேலையை கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சீரணித் தொண்டர்கள் எடுத்துச்செய்ய முடிவு செய்து மேற்படி வேலையை 11—3—68 காலைமுதல் 13—3—68 மாலை வரை செய்து, சாலையில் 6 பர்லாங் தூரம் செப்பனிட்டுள்ளார்கள்.

சீரணித் தொண்டர்கள் 50 பேர்களும், ஒன்றிய விரிவுப் பணியாளர்களும், சேர்ந்து மூன்று நாட்களிலும் செய்த வேலையின் மதிப்பு ரூ. 850 எனக் கணக்கிடப்படுகிறது.

சாலை செப்பனிட்ட பின்னர், திருமணஞ்சேரிக்குச் செல்லக் கூடிய வண்டிகள் வசதியாகச் சென்றுவருவது குறிப்பிடத்தக்கது.

16—3—68 முதல் 18—3—68 முடிய மூன்று நாட்களிலும் கறம்பக்குடி கோழிச்குடாட்புகுளம் மராமத்து செய்யும் வேலையை சீரணித் தொண்டர்களைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாலர் அரங்கம்

மார்ச் 22, 23, 24-ந் தேதிகளில் மாலை 4 மணிக்கு

'ஸ்கபங்கா'

(கலர் படம்)

(கட்டணம் வழக்கம்போல்)

நா. காமராசன் எம்.ஏ.

இலக்கிய நிகழ்ச்சிகள்

மார்ச் 21: அமெரிக்கன் கல்லூரி; 23: கருத்தாராவுத்தர் கல்லூரி; 26: டோக்பெருமாட்டி கல்லூரி; 29: தியாகராசர் கல்லூரி; ஏப்ரல் 14: சிவகங்கை.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.